# முகிலை இராசபாண்டியனின் படைப்புகளில் தமிழர் தொழில் நுட்பத்தில் அறிவியல்

56

**கோ. கலைச்செல்வி**

**அகராதியியல் துறை, தமிழ்ப் பல்கவைக்கழகம்**

**தஞ்சாவூர் – 10**

**ஆய்வுச் சுருக்கம்**

ஒவ்வொரு பிரதேசமும் ஒவ்வொரு தனித்துவமான வாழ்வியல் அமைப்புடன் அமைவது இயற்கை நியதியாகும். அவ்வகையில் முகிலை இராச பாண்டியனின் படைப்புகளுள் நாவல் மற்றும் சிறுகதைகளில் கன்னியாகுமரி மாவட்ட மக்களின் தொழில்கள் ஒவ்வொன்றும் அறிவியல் தொழில்நுட்பத்துடன் எவ்வாறு செயல்படுகிறது என்பதையும் அவற்றுள் பனையேறுதல், உப்புக்காய்ச்சுதல், மீன்பிடித்தல், ரப்பர் தயாரித்தல், தேங்காய் நாரினால் கயிறு திரிக்கும் தொழிலும் அறிவியல் துணைக்கொண்டு எவ்வாறு தயாரிக்கப்பட்டு உற்பத்தி செய்யப்படுகின்றன, விற்பனையாகின்றது போன்ற செய்திகள் இக்கட்டுரையின் வழி விளக்கப்படுவதைக் காணலாம்.

**திறவுச் சொற்கள்:** மீன்பிடித்தொழிற்கருவிகள், தேங்காய் நார்கொண்டு கயிறு திரிக்கும்முறை, உப்பளங்கருவி, விவசாயக்கருவி, பனையேறுதல் கருவி.

**முன்னுரை**

மனிதன் செய்யும் தொழில் அவனது பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் வெளிப்படுத்தும் தன்மை உடையதாய் அமைகிறது. சங்க காலத்தில் மனிதன் எவ்வாறு தொழில் புரிந்தான் என்பதற்கு மதுரைக் காஞ்சியில் இடம்பெறும் சில தொழில் வகைகள் சன்றாக அமைகின்றன. ஒவ்வொரு மனிதனும் செய்கின்ற தொழிலின் அடிப்படையில்தான் சமுதாயத்தில் மதிப்பு ஏற்படுகின்றது. அந்த தொழில்கள் அறிவியலின் துணைக்கொண்டு எவ்வாறு செயல்படுத்தப் படுகின்றது என்பதையும்,

“செய்யும் தொழிலே தெய்வம்” என்னும் பழமொழிக்கு ஏற்ப தொழில்கள் சிறப்புடன் அமைகின்றது.அவ்வகையில் முகிலையின் படைப்புகளில் அறிவியல் தொழில்நுட்பத்துடன் தொழிலின் சிறப்பைப் பற்றியும் தெரிந்துக்கொள்ள இக்கட்டுரை பயன்படும் என்பதை அறிந்துகொள்ளலாம்.

**உட்தலைப்புகள்**

i. நிலம் சார்ந்த அறம் மற்றும் உழவுத்தொழில் கருவிகளும்.
ii. பண்டமாற்று முறையில் அறிவியலின் பயன்பாடு.
iii. நெய்தல் நிலத்தில் தமிழர் தொழில் நுட்ப அறிவியல் செயல்பாடுகள்.
iv. கைவினைப் பொருட்களும் குடிசைத்தொழில்களில் தமிழர்தொழில்நுட்ப அறிவியல் பயன்பாடும்.
v. மீன்பிடித்தொழில்களும் அறிவியல் தொழில்நுட்ப கருவிகளும்.
vi. பனைநார் மற்றும் தேங்காய் நாரினால் கயறுதிரிக்கும் தொழிலில் அறிவியல் நுட்பங்களும்.

**நிலம் சார்ந்த அறம் மற்றும் உழவுத்தொழில் கருவிகளும்**

படைப்பாளன் தன் சிந்தனைகளையும், கற்பனையையும் மட்டும் வைத்துக் கொண்டு படைப்பை வெளிக்கொணர முடியாது. தன்னைச் சுற்றியுள்ள புறஉலக இலக்கியங்களையும் உள்வாங்கிக் கொள்ள வேண்டும் நம் முன்னார், இயற்கையோடு இயைந்து வாழ்ந்ததோடு மட்டுமில்லாமல் அவற்றை முதல், கரு, உரிப்பொருள் என்றும் முப்பொருள் கூறுகளில் வெளிப்படுத்தியுள்ளதைத் தொல்காப்பியம் உணர்த்துகிறது. தொல்காப்பியர் முதற்பொருளாகக் சுட்டுவது நிலமும் பொழுதுமே.

**“முதலெனப் படுவது நிலம் பொழுதிரண்டின்**
**இயல் பென மொழிப இயல் புணர்ந்தோரே”[1]**

என்றுரைப்பர். கருப்பொருள்கள் பற்றிக் கூறும் போது நிலம் சார்ந்த பொருள்களையும் நிலத்து வாழ் மக்களையும்,

**“தெய்வம் உணவே மாமரம் புட்பறை**
**செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ**
**அவ்வகை பிறவும் கருவென மொழிப”[2]**

என்றும் தொல்காப்பியர் குறிப்பிடுவார்.

உழவுத் தொழிலைச் செய்பவர்கள் விவசாயிகள் என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் பருவம் அறிந்து பயிர்செய்தனர். இதனை,

**“நீர்த்தெவ்வும் நிரைத்தொழுவர**
**பாடு சிலம்பு இசை, ஏற்றத்தொடு,**
**வழங்கும் அகல் ஆம்பியின்,**
**கயன் அகைய வயல்நிறைக்கும்,**
**மென் தொடை வன்கிழா அர்,**
**அதரி கொள்பவர் பகடு பூண்தெள்மணி**
**இருள் புள் ஒப்பும் இசையே என்றும்”[3]**

என மதுரைக்காஞ்சி கூறுகின்றது. விவசாயிகள் உழவுத் தொழில் புரிய நமக்கு உதவிக்கு தொழிலாளர்களை நியமித்திருந்த செய்திகளையும் அறிந்து கொள்ள முடிகிறது. மேலும், இவ்வுலகில் வாழுகின்ற உயிர்கள் அனைத்தின் பசியைப்போக்க உழவுத்தொழிலுக்கு மட்டுமே உண்டு அதனால் தான் திருவள்ளுவர்,

**உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்**
**தொழுதுண்டு பின்செல் பவர். (குறள்.1033)**

என்ற குறளில் விளக்கியுள்ளார்.

கன்னியாகுமரி மாவட்டம் மீன்பிடித்தொழில் செய்தலும், பனையேறுதல் செய்தலும் விவசாயத்திலும் சிறப்புற்று விளங்குகிறது.

அறிவியல் தொழில் நுட்பத்தின் இன்று எளிதில் உழுவதற்கும், பயிர் நடவு செய்யவும், கதிர் அறுவடை செய்யவும், உளுந்து மற்றும் சிறுதானிய பயிர்களும் நடவு செய்ய பல்வேறு விதமான கருவிகள் வந்து குவிந்துள்ளதை அறிந்து கொள்ள முடிகிறது.

**பண்டமாற்று முறையில் அறிவியலின் பயன்பாடும்**

கன்னியாகுமரி மாவட்டத்தில் கோவளம், சின்னமுட்டம், கீழமணக்குடி, மேலமணக்குடி, பொழிக்கரை, சின்னவிளை, பெரியவிளை என்று பல்வேறு பகுதிகள் உள்ளன. அவற்றிற்கு மீன்களையும், உப்புகளையும் கொண்டு சென்று உணவுப்பொருட்களை வாங்கிக்கொண்டு சென்று சமைத்து உண்பது தேவையானப் பொருட்களை ஒன்றிற்கு பதிலாக மற்றொன்றை கொடுத்து பெற்றுக் கொள்வது பண்டமாற்றுமுறை என்றாலும்;

இன்று அறிவியல் கருவிகள் துணையில் தலையால் சுமந்து செல்லும் வழக்கம் சற்று குறைந்து இன்று வாகனங்களின் துணையால் எளிமையாக கொண்டு செல்லும் நிலை உருவாகியுள்ளது.

கீழ மணக்குடி, மேலமணங்குடி என்ற இரு பிரிவு ஊர்கள் உள்ளது.

“மணங்குடி ஊரின் நடுவில் இருந்தது அந்த வழி  கழிக்கே கிழக்கே இருப்பதைக் கீழ மணங்குடி என்றும் சொல்வார்கள்”[4]

அன்று நடந்து செல்லும் நிலை இருந்துள்ளது இன்று காலத்தின் கட்டாய மாற்றத்தால் அறிவியல்தமிழ் நுட்ப வளர்ச்சியினால் மாற்றம்பெற்று சிறந்துள்ளது.

**நெய்தல் நிலத்தில் தமிழர் நுட்ப அறிவியல் செயல்பாடுகள்**

நெய்தல் நில மக்கள் மீன்பிடிக்கும் தொழிலைப் பற்றி அறிந்தவர்களாக இருந்துள்ளனர். உப்புதயாரித்தல், வலை பின்னுதல், மீன்பிடியை வளர்ச்சி மாற்றக் காரணத்தால் இயந்திரத்தின் துணையோடு இன்று விசைபடகுகளுடன்  செல்கின்றனர்.

ஓர் இன மக்களின் உணவு, உடை, உறைவிடம்ஈ தொழில்கள் என்று அவர்கள் தாம் வாழிடங்களை அடிப்படையாகக் கொண்டது.

**உயிரினங்கள் இயல்புகளையும் நன்கு அறிந்திருந்தனர் என்பதினை,**

**“நத்தொடு நள்ளி நடை இறவு வயவாளை**

**வித்தி அலையல் விளைகி பொலிக என்பார்.” [5] (பரிபாடல் 10: 85-86)**

என்னும் அடிகள் பொன்சங்கு, நண்டு, இறல், வாளை போன்றவற்றை ஆற்றில் இட்டால் உயிரினங்கள் பல்கி ஆறுவளம் பெருகும் என்ற நம்பிக்கை கொண்டிருந்தமையைப் புலப்படுத்துகின்றன.

அறிவியலின் துணையினால் கடலில் ஒவ்வொரு உயிரினங்களையும் பிடித்து வருவதற்கு ஒவ்வொரு விதமான வலைகளை பயன்படுத்துவதற்கு தொழில்நுட்ப வளர்ச்சியினால் உணர்த்தப்படுகின்றன.

**கைவினைப் பொருட்களும், குடிசைத்தொழில்களில் தமிழர் தொழில்நுட்ப அறிவியல் பயன்பாடு**

முகிலையின் படைப்பில் பல்வேறு குடும்பங்கள் வழிவழியாகக்  சுண்ணாம்பு பொம்மைகளை செய்து அதை விற்று பிழைப்பைப் பார்த்தவர்களின் நிலை தெளிவுபடுத்தப்படுகின்றது.

கைவினைப் பொருட்கள் என்று கூறும்போது வீடுகளிலே கைத்தொழிலாக மட்டைப் பின்னுதல், கூடை முடைதல், விசிறிமட்டை செய்தல் என்று பாதுகாக்கப்படுகின்றது.

**மீன்பிடித் தொழில்களும் அறிவியல் தொழில்நுட்ப கருவிகளும்**

இயற்கை இழைநூல், செயற்கை இழைநூல் என்று பல்வேறு விதமாக இருந்தன இயற்கையோடு இயைந்த வாழ்வை மனிதன் மேற்கொண்டான். என்ற கருத்துக்கு ஏற்ப இயற்கை ழை நூலில் தாவர வகை நூல், மிருக வகை நூல் என பிரித்து அறியப்படுகிறது.

| **தாவர வகை** | **மிருகவகை** |
|---|---|
| பருத்தி, சணல் | கம்பளி, பட்டு |

செயற்கை இழை நூலின் வகைகள் நான்கு வகைகளில் உள்ளன.

| **பாலியாமயிட்** | **பாலிஸ்டர்** | **பாலிபிரோலின்** |
|---|---|---|
| நைலான் | டெரிலின் | மானோபிலமண்ட |

**மீன்பிடிக்க பயன்படுத்தும் கருவிகளில் சில**

- விசைப்படகுகள்
- வள்ளங்கள்
- கட்டுமரங்கள்
- வலைகள்
- கிட்டக்கயிறுகள்.

முக்குவர், பரதவர்,நுழையர் என்ற பிரிவுகளில் இருந்தாலும் மீன்பிடித் தொழில் முக்குவர், பரதவர் என்ற இரு வகுப்பினரும் அதிக அளவில் அறிவியலின் துணையுடன் இன்று திசைக்காட்டும் கருவிகளுடன் கடலுக்கு சென்று வருகின்றனர்.

**பனைநார் மற்றும் தேங்காய் நாரினால் கயிறு திரிக்கும் தொழிலில் அறிவியல் நுட்பங்கள்**

“தேங்காய் இருந்து உரித்த கதம்பங்கள் ஊறவைக்கப்பட்டு நன்கு அழுகிய நிலையில் இருந்து எடுத்து அதை கருங்கல்லின் மேல்வைத்துக் கம்பால் ஓங்கி அடித்து அதில் உள்ள துகள்கள் கீழே சிதறிவிழும் பிறகு பஞ்சுபோல வந்திழும் அதன்பிறகு அந்த பஞ்சை இராட்டைகளை வைத்துக் கயிறு முறுக்குவோர் களிறு முருக்குவார்கள்.

காய்ந்த பஞ்சுகளை வட்டமாகப் போட்டு அடித்து மென்மையான பஞ்சை உதிரியாக இராட்டில் உள்ள கதிரில் சுற்றுவதற்கு ஏற்ப அந்த கதிரும் சுற்றும்.

ஒரு பற்லாங்கு தூரம் கயிற் சுற்றியவுடன் ஒன்றுக்குள் ஒன்றைக் கதிர் இராட்டில்விட்டு ஒரே கயிறாக திரித்து நான்கு மடிப்பாகி, எட்டு மடிப்பாகி பின்னர் தனித்தனியாக நறுக்கி உருவாக்கப்பட்டது.”[6]

**முடிவுரை**

முகிலையின் படைப்பில் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில் அனைத்து மக்களும் எந்த விதமான கைத்தொழில்களையும் மேற்கொண்டால் ஒவ்வொரு வகையான தொழிலுக்கும்

உப்பு விளைவித்தல், மீன்பிடித்தல், கயிறுதிரித்தல் பனையேறுதல் என்று தமிழர் தொழிலில் நுட்பத்தில் அறிவியலின் பங்கு அதிக அளவில் இருப்பதாக அறிய முடிகின்றது.

**பார்வை நூல்கள்**

1. தொல்காப்பியம் நூற்பா

2. மேலது
3. மதுரைக்காஞ்சி, பொ.வே. சோமசுந்தரனார் ப. 89 – 95.
4. முகிலை இராச பாண்டியனின் தேரிமனல் நாவல் ப.23
5. பரிபாடல் ப. 10: 85 -86
6. முகிலை இராச பாண்டியனின் அருகருகே நான்கு வீடுகள் ப. 101 - 102